**தலைப்பு 259 – மாத்தளை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாத்தளை மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாத்தளை மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாத்தளை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்த லொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

### (அ) கணக்காய்விற்கு சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கட்டுநிதி சீராக்க கணக்கில் காணப்படும் புகையிரத திணைக்களத்தினால் மாத்தளை மாவட்ட செயலக செலவினத் தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்ட ரூபா 25,100 ஆன பெறுமதிக்கான வரவு அறிவித்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | புகையிரத திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட போதும் வரவு அறிவித்தல்கள் உரிய காலப்பகுதியில் வழங்காமை தொடர்ந்தும் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வரவு அறிவித்தல்கள் பெற்று சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிக்கூற்றுக்களில் ACA - 3 கட்டுநிதி கணக்கு தொடர்பான கூற்றில் ஏனைய மூலாதரங்களிலிருந்து உரிய ஈடாக்களாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 61,049,778 இற்காக பெறுவனவுகள் மூலாதாரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கலேவல மற்றும் உக்குவல ஆகிய பிரதேச செயலகங்களினால் நாளாந்தம் சேகரிக்கப்படும் வருமானம் தனத்தனி பெறுவனவு உறுதிச் சீட்டாக சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உள்ளடக்குவதற்குப் பதிலாக ஒவ்வொரு பெறுமதியாக உள்ளடக்கும் வகையில் இந்த குறைபாடு இடம்பெற்றுள்ளதாகவும் எதிர்காலத்தில் இந்த வகையில் கணக்கீடு செய்யக்கூடாதென அறிவிகப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பெறுவனவு மூலாதாரங்களிலிருந்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமை | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 104 | 49,875 | வாகன விபத்திற்குரிய நட்டம் தொடர்பாக விபத்து இடம்பெற்று 06 மாத காலம் கடந்திருந்த போதும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ரூபா 49,875 தொகையை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 2.2 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வயம்ப கால்வாய் செயற்திட்டத்திற்காக காணியை கையேற்கும் போது கலேவல பிரதேச செயலக பிரிவின் தண்டுயாய கிராம சேவையாளர் பிரிவின் காணித் துண்டொன்றின் பெறுமதி மாகாண பிரதான பொறியியலாளரால் முதலாவது வயல் காணியொன்றாக கருதி ரூபா 91,000 ஆன அபிவிருத்தி பெறுமதியொன்று இழப்பீடாக தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் பல சந்தர்ப்பங்களில் மதிப்பீட்டுப் பெறுமதியை மாற்றியதன் பேரில் இறுதியில் ரூபா 2,905,800 தொகை கொடுப்பனவு | வயல் காணியொன்றாக கருதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் பிரிவின் ஏனைய காணிகளுடன் ஒப்பிடும் போது தரைக் காணி அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொள்வதன் மூலம் கூடுதலான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தால் அதனை பொறுப்பான வர்களிடமிருந்து அறவிடு செய்யப்பட. வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செய்தற்கான அடிப்படை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. | | |
| (ஆ) | வயம்ப கால்வாய் செயற்திட்டத்திற்காக காணியை கையேற்கும் போது கலேவல பிரதேச செயலக பிரிவின் அரசின் 07 காணித்துண்டுகளுக்காக முறையான அங்கீகாரமின்றி தனியார் காணியாக கருதி ரூபா 2,791,975 ஆன இழப்பீடு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | வயம்ப கால்வாய் செயற்திட்டத்திற்காக கலுகங்கை செயற்திட்ட நிர்மாணத்தின் போது செயற்பட்ட வகையில் நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் விசேட அங்கீகாரம் இன்றி கொடுப்பனவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது | - மேற்படி - |

**2.3 முற்பண வழங்கல் மற்றும் தீர்வுசெய்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தளை பிரதேச செயலகத்தில் சேவை ஈடுபட்டிருக்கும் போது 05 ஆண்டுகளுக்கு முன்னர் வேலை இடைநிறுத்தத்திற்கு உட்பட்ட ஊழியர் ஒருவரிடமிருந்து ரூபா 170,602 ஆன இடர் கடன் அறவிடப்பட வேண்டியிருந்தது. | ரூபா 1,000 வீதம் தவணை அறவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது | கடன்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அடையாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தளை பிரதேச செயலக பிரிவில் 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை 06 கட்டிட செயற்திட்டங்கள் மறறும் விளையாட்டரங்கொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 5,975,482 செலவிடப்பட்டிருந்த போதும் மேலும் பூர்த்தி செய்ய வேண்டிய பகுதிகள் காணப்பட்டமையால் நிர்மாண செயற்திட்டங்களை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் இருந்தது. அதன் காரணமாக அதற்காக செலவிடப்பட்ட பணம் விளைவற்று காணப்பட்டது. | நிர்மாணங்களின் தரம் மற்றும் நிலைமை எதிர்பார்த்த மட்டத்தில் காணப்படாமை காரணமாக கொடுப்பனவு இடைநிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது | செயற்திட்டங்களின் வேலைப்பகுதிகளை பூர்த்தி செய்து பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அடையாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பள்ளேபொல பிரதேச செயலகத்தின் சௌபாக்கிய உற்பத்தி கிராம செயற்திட்டத்தின் கீழ் தானியங்கள் மற்றும் கறுவா உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக ரூபா 682,500 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டு கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும் அக்கட்டிடத்தின் வலை மேவுகை இடாமை காரணமாகவும் இரும்பு வாயிற் கதவு உரிய உயரத்திற்கு இடாமையால் பாதுகாப்பின்மை காரணமாக இயந்திரங்கள் நிறுவப்படாமல் இருந்ததுடன் கட்டிடத்தில் நெல் மற்றும் தானியங்கள் அரைக்கும் இயந்திரங்களை நிறுவுவதற்கும் போதியளவில் இடவசதிகள் காணப்படவில்லை.. | பல கட்டங்களின் செயற்படும் செயற்திட்டமொன்றாக இருப்பதால் அடுத்த கட்டத்தில் போதியளவு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு முன்னர் முறையாக திட்டமிடப்பட வேண்டியதுடன் அவை முறையாக பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.3 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கலேவல பிரதேச செயலக பிரிவின் மொரகொல்ல கிராம சேவையாளர் பிரிவில் இரண்டு மாடி சுயதொழில் நிலையக் கட்டிடமொன்றை நிர்மாதணிப்பதற்குரிய திட்டத்தின் பிரகாரம் முன்னைய ஆண்டின் திசெம்பர் 30 ஆந் திகதி அளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நவம்பர் 22 ஆந் திகதி வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சீரற்ற காலநிலை காரணமாக செயற்திட்டத்தை குறித்த திகதியில் ஆரம்பிக்க முடியாமல் இருந்ததுடன் எஞ்சிய வேலைகளுக்காக 2021 நிதிஏற்பாடு கிடைக்கவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது | கட்டிடத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்து பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | பள்ளேபொல பிரதேச செயலகத்தின் சௌபாக்கிய உற்பத்தி கிராம செயற்திட்டத்தின் கீழ் தேங்காய் மற்றும் தேங்காயுடன் அண்மித்த உற்பத்திகளை மேம்படுத்து | இச்செயற்திட்டம் பல கட்டங்களின் செயற்படும் செயற்திட்டமொன்றாக இருப்பதால் அடுத்த கட்டத்தில் | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வதற்காக ரூபா 282,500 ஆன செலவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் வேலைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 பெப்ரவரி 08 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | போதியளவு கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | தானியங்கள் மற்றும் கறுவா உற்பத்திகளை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்குரிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் பள்ளேபொல அம்பொக்க திம்பிரியங்க வீதியின் 1040 அடிக்கு கற்களை பரப்பி அபிவிருத்தி செய்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்வதற்காக ரூபா 3 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2022 பெப்ரவரி 08 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணப் பொருட்கள் பற்றாக்குறை காரணமாக வீதியின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு தாமதமாக இருந்ததுடன் இது அனைத்து செயற் திட்டங்களுக்காக பொது நிலைமையொன்றாக அறிவிக்கப்பட்டிருந்தது | செயற்திட்டத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்து பயன்படுத்த் வேண்டும். |

**3.4 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் முன்னேற்றமடையாதிருந்த திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | உக்குவல பிரதேச செயலக பிரிவின் எள்ளு மற்றும் முருக்கு உற்பத்தியாளர்களின் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு தேவையான வேலை கூடங்களை நிர்மாணிப்பதற்காக அரசின் பங்களிப்பின் கீழ் ரூபா 100,000 வீதம் ரூபா 900,000 ஆன நிர்மாண பொருட்கள் 09 பேருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2022 சனவரி 26 ஆந் திகதி வரையிலும் வேலை கூடங்களின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை | கொவிட் 19 தொற்று நிலைமையில் வருமான உருவாக்கம் மட்டுப்படுத்தப்பட்டமை, நிர்மாணப் பொருட்கள் பற்றாக்கறை மற்றும் விலைகள் அதிகரித்ததன் பேரில் வேலைகூடங்கள் நிர்மாணம் தாமதமடைந்ததுடன் தற்போது அவ்வேலைகூடங்களை விரைவில் ஆரம்பிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | குறித்த நிர்மாண வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சௌபாக்கிய உற்பத்தி கிராம செயற்திட்டத்தின் கீழ் உக்குவல பிரதேச செயலகப்பிரிவில் முழுதான லாக்ஷா பயிற்சிக் கிராமம் ஒன்று நிர்மாணிப்பதற்கு மீளாய்வாண்டில் ரூபா 800,000 பெறுமதியான நிர்மாணப் பொருட்கள் 08 பயனாலிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் உரிய நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை . | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | சௌபாக்கிய உற்பத்தி கிராம செயற்திட்டத்திற்குரிய உக்குவல பிரதேச செயலக பிரிவில் சேதனப் பசளை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் செயற்திட்டத்தின் கீழ் சேதனப் பசளை உற்பத்திக்காக ரூபா 1,000,000 ஆன நிர்மாணப் பொருட்கள் 10 நலனாலிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2022 சனவரி 26 ஆந் திகதி வரையிலும் குறித்த நிர்மாணம் பூர்த்தி செய்து சேதனப் பசளை உற்பத்தி ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சேதனப் பசளை உற்பத்திக்காக தேவையான காயாத மூலப்பொருட்களை பயன்படுத்தி கொம்போஸ்ட் ஆக மாறும் வரை ஒரே இடத்தில் குவித்து வைக்கப்பட்டதன் பின்னர் கூடத்தில் களஞ்சியப் படுத்தப்படுவதால் களஞ்சியத்தில் பசளை காணப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. | நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்து எதிர்பார்த்த நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 பெறுகை**

---------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தால் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு உரிய தேவைப்பாட்டிற்கு பொருந்தும் வகையில் பொருளின் தரம், முடிபு நீடித்திருத்தல் மற்றும் தற்போது மாவட்ட செயலகத்தின் தேவைப்பாட்டிற்கு பொருந்தும் விதந்துரைகள் அடிப்படையில் குறைந்த விலை விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிறுவனங்களில் இருந்து பொருட்களைக் கொள்வனவு செய்யாமல் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அதன் விதந்துரைகள் விலைகோரும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பொருட்கள் தனிபட்ட வகையில் பரீட்சிக்கப்பட்டு பொருந்தாமை குறையும் வகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த தாக அறிவிக்கப்பட்டிருந்தது | விலை கோரலின் போது தேவையான விதந்துரைகள் காண்பிக்கப்பட வேண்டியதுடன் மதிப்பீட்டு செயற்பாடுகளின் போது அந்த விதந்துரைகள் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

இதன் காரணமாக ரூபா 556,399 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

## 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

--------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்குரிய கட்டிடங்களில் குடியிருக்கும் ஏனைய 11 நிறுவனங்களிடமிருந்து மீளாய்வாண்டின் யூன் முதல் திசெம்பர் வரை 07 மாத காலப்பகுதிககுரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 888,818 ஆன நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவைத் தொகையை கொடுப்பனவு செய்யுமாறு அறிவித்து கடிதங்கள் அனுப்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிலுவையாக இருப்பதை தவிர்ப்பதற்காக நடைமுமறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் இனங்காணப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி இலக்குகுளில் சுற்றாடல் சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல், காணி கடமை மேற்பார்வை, சிறுவர் பிரச்சினைகளை கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் மற்றும் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்தல் போன்ற இலக்குகளை அடைந்து கொள்ளும் செயன்முன்னேற்றம் வருடாந்த இலக்கிலிருந்து 50 சதவீதத்திற்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு எதிர்காலத்தில் செயன் முன்னேற்றத்தை 50 சதவீதத்தை மிகைத்து செயற்பட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 5. நல்லாளுகை

-----------------------

### 5.1 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

-------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஏப்ரல் முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் காணி ஆணையாளர் நாயகத்திடமிருந்து மாத்தளை பிரதேச செயலகத்திற்கு கிடைத்திருந்த 20 மானியப் பத்திரங்கள் 2021 நவம்பர் 19 ஆந் திகதி வரை உரிமையாளர்களுக்கு கையளிக்கப்படாமல் 01 மாதம் முதல் 07 மாதங்கள் வரையான காலப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | காணி ஆணையாளர் நாயகம் மற்றும் மாகாண காணி ஆணையாளர் திணைக்களதின் ஆலோசணையின் பிரகாரம் விழாவொன்றை நடாத்தி பகிர்ந்தளிப்பதற்கு அலுவலகத்தில் நிறுத்தி வைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | நலனாலிகளுக்கு மானியப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தம்புள்ள பிரதேச செயலக பிரிவின் 36 கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து கிடைத்திருந்த 1333 விண்ணப்ப பத்திரங்கள் தொடர்பாக காணி கச்சேரி நடாத்தப்படாதிருந்ததுடன் தம்புள்ள நகரிலும் மாத்தளை பிரதேச செயலக பிரிவின் 09 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குரிய வெளிக்கள பரிசோதனை செயற்பாடுகள் இடம்பெற்றிருக்கவில்லை | அடுத்த வரும் நாட்களில் வெளிக்கள பரிசோதனைகளை பூர்த்தி செய்யுமாறு குடியிருப்பு உத்தியோகத்தர் அறிவுறுத்தப்பட்டள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | காணி கச்சேரி நடாத்தப்பட வேண்டியதுடன் உரிய துறைகள் பரீட்சிக்கப்பட வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் 21 பதவிகளில் 212 ஊழியர் வெற்றிடங்களும் 09 பதவகளில் 133 ஊழியர் மிகைகளும் காணப்பட்டன. | 2022 ஆம் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மிகை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 2020 ஆகஸ்ட் 31 ஆந் திகதி ஒன்றிணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கு உரிய வருடாந்த இடமாற்றக் கொள்கையின் 2.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரே இடத்தில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவை புரிந்துள்ள உத்தியோகத்தர்களை இடமாற்றத்திற்கு உட்படுத்த வேண்டும் எனினும் மாவட்ட செயலகம் மற்றும் கலேவல, தம்புள்ள, உகுவெல மற்றும் பள்ளேபொல பிரதேச செயலகங்களில் 46 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தொடர்ச்சியாக ஒரே சேவை நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். | அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் ஆலோசணையின் பேரில் நிறுத்தப்பட்டிருந்தது. ஏனைய உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்தும் இடமாற்றம் கிடைத்திருக்க வில்லை. எனவும் 2022 ஆம் ஆண்டின் போது உள்ளக இடமாற்ற கொள்கை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது | ஒரே இடத்தில் 05 ஆண்டுகளுக்கு மேல் சேவை புரியும் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டியதுடன் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்தும் கிடைக்காத உத்தியோகத்தர்களை மாவட்டத்திற்கு உள்ளேயாயினும் இடமாற்றம் செய்யப்பட வேண்டும். |